பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**11 02 2026 6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் ஆர்வம் ஊக்கமளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** தமிழகத்தில் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

**3.** மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் நாட்டிலேயே தமிழகம் முன்னணியில் உள்ளது என்று மாநில தொழில் துறை அமைச்சர் திரு டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

**4.** நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் எதிராக திமுக தொடர்ந்து கருத்துகளைத் தெரிவித்து வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

**5.** சென்னை சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் ஆர்வம் ஊக்கமளிப்பதாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுடன் பிரதமர் கலந்துரையாடும் பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்வின் ஒரு பகுதியாக கோயம்புத்தூரில் மாணவர்களுடன் கலந்துரையாடிய பதிவை சமூக வலைதளத்தில் அவர் பகிர்ந்துள்ளார்.

கோவை மாணவர்களுடன் உரையாடியது அற்புதமான அனுபவமாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

புத்தொழில்கள் முதல் செயற்கை நுண்ணறிவு வரை இன்றைய மாணவர்கள் ஆர்வத்துடன் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான அவர்களது கனவு மிகச் சிறந்ததாக உள்ளது என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், மாநிலத்தில் தற்போது **13** ஆயிரத் **780** புத்தொழில் நிறுவனங்கள் உள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் புத்தொழில் நிறுவனங்களுக்கு மத்திய அரசின் திட்டங்கள் மூலம் ஆயிரத்து **394** கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புத்தொழில் நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத திட்டம் போன்ற திட்டங்கள் மூலம் **100** கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக திரு. ஜிதின் பிரசாதா குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் வாழை உற்பத்திக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக வேளாண்துறை இணையமைச்சர் திரு. ராம்நாத் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், மாநிலத்தில் கடந்த ஆண்டில் 49 லட்சம் டன் வாழை உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை உற்பத்தி மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் மத்திய அரசு வாழை உள்ளிட்டவற்றின் உற்பத்தியை மேம்படுத்த உதவி அளித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ் கடந்த 3 ஆண்டுகளில் தமிழகத்திற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

திருச்சியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி நிறுவனம் புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பாகவும், உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாகவும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. ராம்நாத் தாக்கூர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ் 85 லட்சத்து 51 ஆயிரம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தல் இதுவரை ஒரு கோடியே 21 லட்சம் மருத்துவமனை சேர்க்கைகள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

நோயாளிகளின் சிகிச்சைக்காக 9 ஆயிரத்து 541 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கூறினார்.

<<<<>>>>

மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் நாட்டிலேயே தமிழகம் முன்னணியில் உள்ளது என்று மாநில தொழில் துறை அமைச்சர் திரு டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

சென்னையில் இது தொடர்பான கண்காட்சி ஒன்றை தொடங்கி வைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்னணு பொருட்கள் உற்பத்தி துறைக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் அதை தமிழக அரசு முறையாக பயன்படுத்துகிறது என்றும் தெரிவித்தார்.

**(Voice Byte - T.R.B. Raja - 45 Sec)**

<<<<>>>>

நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் எதிராக திமுக தொடர்ந்து கருத்துகளைத் தெரிவித்து வருவதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், புதுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பிரிவினையைத் தூண்டும் வகையில் மாநில அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் பேசியது கண்டனத்திற்குரியது என்று கூறியுள்ளார்.

அமைச்சராக உள்ள ஒருவர் இவ்வாறு பேசியதை ஏற்க முடியாது என்றும், அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் துணைத் தேர்தல் ஆணையர் திரு. பானுபிரகாஷ் இன்று சென்னை வரவுள்ளார்.

தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக அவர் தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடனும், உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்த உள்ளார்.

மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு தொடர்பாகவும் அவர் ஆய்வு செய்ய உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்களுடன் மாநில வருவாய்த்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சாய்குமார் காணொலிக் காட்சி மூலம் நேற்று ஆலோசனை நடத்தினார்.

துல்லியமான தரவு சேகரிப்பு, மேம்பட்ட தொழில்நுட்ப அம்சங்கள் போன்றவை குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட்டதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

இணைய பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சர்வதேச இணைய பாதுகாப்பு தினம் நேற்று கடைபிடிக்கப்பட்டது.

இதனையொட்டி தருமபுரி கேந்திர வித்யாலயா பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதுகுறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Dhandapani - 45 Sec)**

<<<<>>>>

தமிழகத்தில் இன்று வறண்ட வானிலை நிலவும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிருஷ்ணகிரி, தருமபுரி, சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்றும், நாளையும் அதிகாலை நேரங்களில் பனிமூட்டம் அதிகரித்து காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

நாளை மறுநாள் தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

இஸ்ரேல் பிரதமர் திரு பென்ஜமின் நெதன்யாகு, வாஷிங்டனில் அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் ட்ரம்ப்பை இன்று சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

-----------

யுக்ரைனின் கிழக்குப் பகுதியில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 14 பேர் காயம் அடைந்தனர்.

-----------

ஐரோப்பிய யூனியன் மற்றும் அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுனிசிலின் பிரதிநிதிகளுடன் மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று ஆலோசனை நடத்தவுள்ளார்.

-----------

மூலிகைத் தாவரங்கள் குறித்த கருத்தரங்கை புதுதில்லியில் மத்திய ஆயுஷ்துறை இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் இன்று தொடங்கி வைக்கிறார்.

-----------

உத்தரப்பிரதேசம் மற்றும் ராஜஸ்தானில் வரும் நிதி ஆண்டுக்கான பட்ஜெட் இன்று அந்தந்த மாநில சட்டப்பேரவைகளில் தாக்கல் செய்யப்படுகிறது.

-----------

நெல்லையில் புத்தகத் திருவிழாவை சட்டப்பேரவைத் தலைவர் திரு அப்பாவு தொடங்கி வைத்தார்.

-----------

“என் ஊர் என் கனவு” திட்டம் தொடர்பான கலந்தாய்வு கூட்டம் திருவள்ளூரில் அமைச்சர் திரு நாசர் மற்றும் ஆட்சியர் திரு பிரதாப் தலைமையில் நடைபெற்றது.

-----------

தென்காசியில் 3-வது பொருநை இலக்கிய திருவிழா நாளை முதல் இரண்டு நாட்கள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு கமல் கிஷோர் கூறியுள்ளார்.

-----------

திருப்பத்தூர் காட்டுத் தீ தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி சிவசௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது.

-----------

சென்னை மெரினா கடற்கரையில் 300 கடைகளை அமைப்பதற்கான வியாபாரிகள் தேர்வு, சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுரப்படி குலுக்கல் முறையில் நாளை நடைபெறவுள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னை சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர், பிரிட்டனின் Felix Gil-ஐ 1-6, 6-1, 6-3 என்ற செட் கணக்கில் வென்றார்.

**<<<<The End>>>>**